நிலம், இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என்ற அபிப்பிராயம் ரிஜிஸ்திரார் அவர்களால் சொல்லப்பட்டது. அதை ரெவினியூ போர்டாருக்கு அனுப்பி, அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

Sri S. NAGARAJA MONIGAR : ஹரிஜனங்களுக்கு என்று ஒரு காலனி தனியாக ஏற்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னதி லிருந்து தெரிகிறது. அங்கு உள்ளவர்கள் ஹரிஜனங்களாகையால் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டதா ? ஏன் இப்படி ஹரிஜனங்களுக்குத் தனிக் காலனி ஏற்படுத்தப்படுகிறது அல்லது அந்தப் பெயர் ஏன் கொடுக்கப் பட்டது என்று அறிய விரும்புகிறேன். 1.40 p.m.

The Hon. Sri R. VENKATARAMAN : இரண்டு சொஸைடி கள் பண்ணுவதாக உத்தேசம். ஒன்று ஹரிஜனங்களுக்கு. மற்றது நிலம் இல்லாத ஏழைகளுக்கு. ஹரிஜனங்களுக்கு ஏன் கொடுக்கப்படுகிறதென் றால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தினால்தான்.

Government Hospital, Nagercoil

* 195 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 9th September 1957, from the Nagercoil Town Committee of the Communist Party regarding the improvement of the Government Hospital at Nagercoil; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) It was transferred to the Director of Medical Services for consideration and submission of necessary proposals. The proposals are awaited.

Sri V. K. KOTHANDARAMAN : கன்னியாகுமரி தனியாகப் பிரிந்த பிறகு நாகர்கோயிலில் இருக்கிற மருத்துவ நிலையத்தை ஒரு மாவட்ட மருத்துவ மனையாக ஆக்குவதற்கு இதுவரையில் முயற்சி செய்யப் படவில்லை. ஆகவே இந்த ஆண்டிலாவது அதுபோல் செய்வதற்குச் சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நான் அதைத்தான் சொன்னேன். அதற்குவேண்டிய சிபார்சுகள் இன்னும் வரவில்லை. அதற்கு வேண்டிய அதிகப்படியான வசதிகள் செய்ய வேண்டியது அவசியம்.

Co-operative Society near Kalrayan Hills

* 196 *Q.*—Sri M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Marketing Society at the foot of the Kalrayan Hills in Attur taluk, Salem district, for marketing the products from the hills and for the benefit of the Hill Tribes there?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

AT :

[4th March 1958

SRI M. P. SUBRAMANIAM : இரண்டு ஆண்டுக்கு முன்பாகவே இந்த மலைவாசிகளுடைய நன்மையை உத்தேசித்து கூட்டுறவு சங்க விற்பனை நிலையம் ஒன்றை மலை அடிவாரத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்பேர்ப்பட்ட இனத்தவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அடிவாரத்தில் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு வருஷமாகப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்வது நாணய சங்கம் வைப்பதற்காகத்தான். அதை வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது வரையிலும் யாரும் சர்க்காரிடத்தில் இதைப்பற்றிச் சொன்னதாகத் தெரியவில்லை.

Burialground at Puliyanthopu

* 197 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for providing separate burial places for different castes in the burialground in Puliyanthopu, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : Separate places have not been reserved in the Pulianthopu cremation ground for different castes.

SRI V. K. KOTHANDARAMAN : பத்து ஆண்டு சுதந்திரத்திற்குப் பிற்பாடும் செத்த பிணத்திற்கு சுடுவதற்கு இடம் இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், உயர்ந்த சாதிக்காரர் தாழ்ந்த சாதிக்காரர் என்கிற பாகுபாடு பிணத்திற்குக் கூட இருக்கிறது என்றால். . . .

MR. SPEAKER : நீங்கள் கேள்வியைப் போடாமல் பிரசங்கம் செய்தால் என்ன செய்வது ? உட்காருங்கள். அவர்தான் இல்லை என்று சொல்லி விட்டாரே.

SRI K. VINAYAKAM : Is it not a fact, Sir, that separate burialgrounds are provided for communities like Hindus, Muslims and Christians because different kinds of burial rituals are performed by the communities concerned?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி புளியந்தோப்பு மயானத்தைப் பற்றியது. அங்கே இந்த மாதிரி பாகுபாடு முன்பு இருந்ததாம். இப்போது இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த இடம் சுடும்படியான இடம். மிகவும் நெருக்கடியான இடமாதலால் அங்குள்ள பிணம் சுடும் மயானத்தை உடனடியாக வேறு இடத்திற்கு அப்புறப்படுத்துவதற்கு கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்வது வேறு விஷயம். அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.